**செ.வெ.எண்:646** **நாள்:31.7.2010**

**இந்து சமய அறநிலையத்துறை**

**செய்திக் குறிப்பு**

**நாள்: 30.07.2010**

**ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசாமி திருக்கோவில் இராஜகோபுரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த கூட்டம்**

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசாமி திருக்கோயில் இராஜகோபுரத்தை ஆய்வு செய்திட அரசால் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப குழு **21.06.2010 அன்று இராஜகோபுரத்தை ஆய்வு செய்து இராஜகோபுரம் பாதுகாப்பான நிலையில் உள்ளதெனவும், இராஜகோபுரத்தின் உறுதித்தன்மை நன்றாக உள்ளது என்றும், அதன் பாதுகாப்பு குறித்து அச்சப்படத் தேவையில்லை** எனவும் தெரிவித்து, இனி மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த முதற்கட்ட அறிக்கை சமர்ப்பித்தது.

அவ்வறிக்கையின் மீதான கலந்தாய்வுக் கூட்டம் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 30.07.2010–ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அரசு முதன்மைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் அறநிலையத்துறை திரு. க.முத்துச்சாமி, இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா. சம்பத், இ.ஆ.ப., மாநிலத் தொல்லியல் துறை முதன்மைச் செயலர்/ஆணையர் முனைவர். திரு. டி.எஸ். ஸ்ரீதர், இ.ஆ.ப., மற்றும் தொழில்நுட்ப குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசாமி திருக்கோவில் இராஜ கோபுரத்தினைப் பாதுகாத்திட எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அவற்றில், உடனடியாகப் பின்வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது:–

1) திருக்கோவில் இராஜகோபுரம் வழியாக வாகனங்கள் செல்வதை உடனடியாகத் தடை செய்ய உரிய உத்தரவுகள் பிறப்பித்தல் வேண்டும்.

2) இராஜகோபுரம் மற்றும் திருக்கோவில் வளாகத்தினைச் சுற்றிப் பட்டாசு வெடித்தல் மற்றும் வாண வேடிக்கைகள் நடத்துவதைத் தடை செய்ய உரிய உத்தரவுகள் பிறப்பித்தல் வேண்டும்.

3) தற்போது இராஜகோபுர கல்காரத்தில் உள்ள சிறு விரிசல்களை சிமெண்ட் மற்றும் Epoxy அல்லாத அடைப்பதற்குரிய சுண்ணாம்பு, கடுக்காய் மற்றும் வெல்லம் ஆகியவற்றின் கலவையினைப் பயன்படுத்தி அடைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4) திருக்கோவிலைச் சுற்றி 40 மீட்டர் சுற்றளவிற்கு புதியதாகக் கட்டுமானங்கள், Pile Foundation மற்றும் ஆழ்குழாய்க் கிணறு தோண்டுதல் ஆகியவற்றைத் தடை செய்ய ஸ்ரீரங்கம் நகராட்சி ஆணையருக்கு உத்தரவு பிறப்பித்தல் வேண்டும்.

5) திருக்கோயிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளையும், திருக்கோயில் நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் இதர கட்டுமானங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளையும் அகற்றுவதற்கான உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் அனைத்தும் 15 தினங்களுக்குள் செயல்படுத்தப்பட வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது.

இராஜகோபுரத்தினைப் பலப்படுத்துவது தொடர்பாக தொடர் நடவடிக்கையாக இராஜகோபுரத்தினை அவ்வப்போது ஆய்வு செய்திடவும், ஆய்விற்குப் பின் அவற்றை ஆவணப்படுத்தவும், இராஜகோபுரத்தின் அடித்தளத்தினை ஆய்வு செய்ய சென்னை ஐ.ஐ.டி கல்வி நிறுவனத்துடன் இணைந்து கான்பூர் ஐ.ஐ.டியிலுள்ள Non penetration radar–ஐப் பயன்படுத்துதல் மற்றும் பிற்கால ஆய்விற்குப் பயன்படும் வகையில் இராஜகோபுரத்தின் அமைப்பினை ஆவணப்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

**இணை ஆணையர் (திருப்பணி)**
**ஆணையருக்காக**

**வெளியீடு:**

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, தலைமைச்செயலகம், சென்னை–9